Registered as a NewsPaper

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் 6

விலை ரூபா 6.00

நாதம் 13 திருவள்ளுவர் ஆண்டு 2033 ஆடி - 18 03-0 8-2002 சனிக்கிழமை ஓசை 166

சிறந்த முறையில் குறித்த தவணையில் அச்சு வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய நிறுவனம்



சந்திரன் பதிப்பகம்
பரந்தன் வீதி,
புதுக்குடியிருப்பு,

## 'போடோ' சட்டத்தின் கீழ்

# தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் தமிழக அரசால் கைது

## தமிழக கட்சிகள் பல கண்டனம்



(சென்னை )

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் 'போடோ' சட்டத்தின் கீழ் தமிழக அரசினால் கைது செய்யப்பட்டார். நேற்று முன்தினம் இரவு சென்னை மைலாப்பூரில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழக காவல்துறையினரால் இவர் கைது செய்யப்பட்டார். எதிர்வரும் 28ம் திகதி வரை இவர் கடலூர் சிறையில் விளக்க மறியலில் வைக்கப்படவுள்ள்தாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவரது கைதுக்கு எதிராக தமிழகத்தில் உள்ள பல கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தார் என குற்றஞ் சாட்டப்பட்டு பழ. நெடுமாறன் அவர்கள் தமிழக பொலிசாரால் கைது செய்யப் பட்டார்.

மலேசியாவிற்கு நேற்று பயணமாக இருந்த அவர் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை பழ. நெடுமாறன் அவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு தி.மு.க. மற்றும் ம.தி.மு.க., தந்தை பெரியார் திராவிடக் கழகம் என்பன தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

ம.தி.மு.க சார்பாக துணை அமைச்சரும், ம.தி.மு.க பொருளாளருமான கண்ணப்பன்

(6ம் பக்கம் பார்க்க)

### -இந்திய துணை அமைச்சர்-

## கண்ணப்பனை பதவி விலக்க ஜெயலலிதா கோரிக்கை

துணை அமைச்சரும் ம.தி.மு.க பொருளாளருமான கண்ணப்பனை பதவி வில்க்கு மாறு கோரி தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அவர் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசி வருவதால் பொடோ சட்டத்தின் கீழ் அவர் குற்றம் இளைத்திருப்பதாக ஜெயலலிதா தமது கடிதத்தில் கூறியுள்ளார்.

இக்கடிதத்தின் நகல் இந்தியத் துணைப் பிரதமர் எல்.கே.அத்வானிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## காற்றினால் கூரைகள் பறந்தன

(அலுவலக நிருபர்)

வன்னிப் பெருநிலப்பரப்பில் தற்போது வீசிவரும் பலத்த காற்றின் காரணமாக பாரிய மரக்கிளைகள் முறிந்து வீழ்ந்ததனால் வீட்டுக் கூரைகள், பாடசாலைக் கூரைகள் என்பன பிடுங்கி எறியப்பட்டுள்ளன.

தற்போது மீண்டும் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள்

(6ம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு பா.உ.கள் இன்று புலிகளுடன் சந்திப்பு

தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை கிளிநொச்சியில் சந்தித்து பேசவுள்ளார்கள்.

கடந்த 27ம் திகதி கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை தமிழ்ச்செல்வன் அவர்கள் சந்திக்கவிருந்த போதிலும் பின்னர் அச்சந்திப்பு நடைபெறவில்லை.

### -தமிழீழ வைப்பகத்தின் -

## செயற்பாடுகளைத் தடுக்க சிங்கள பா.உ.கள் சிலர் கோரல்

தமிழீழ வைப்பகத்தையும் அதன் செயற்பாடுகளையும் உடனடியாக தடுத்து நிறுத்துமாறு கோரும் மனு ஒன்றை சில சிங்கள சிறிலங்கா நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்திய வங்கி ஆளுநரிடம் கையளித்துள்ளனர்.

அரசாங்கத்தின் அனுமதியின்றி தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழ வங்கியை இயக்கி வருவதாக கூறிய அவர்கள் இவ் வங்கி நடவடிக்கைகளை பரிசீலித்து அது தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பு மத்திய வங்கி ஆளுநருக்கே உண்டு எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இம் மனுவைக் கையளித்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன கூறுகையில்: நிதிச்சட்டங்களை

(6ம் பக்கம் பார்க்க)

### - தட்சணாமருதமடு கொலை-

## கைதான சந்தேக நபருக்கு 19ம் திகதி வரை விளக்க மறியல்

(நமது நிருபர்)

தட்சணாமருதமடு பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பாக தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 19ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட தமிழீழ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழீழ காவல்துறையின் குற்றப்புலனாய்வுத்துறையினரின் புலன் விசாரணை மூலம் இனம் காணப்பட்டு கைது செய்யப்பட்ட மேற்படி சந்தேக நபர், வாகனம்

(6ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு கரைக்கு அப்பால் 109 மைலில் எண்ணெய்க் கப்பல் மூழ்குகின்றது

இலங்கையின் கிழக்கு கரைக்கு அப்பால் 109 மைல் தொலைவில் எண்ணெய்த் தாங்கி கப்பலொன்று கடலில் மூழ்கிய வண்ணம் இருப்பதாக சிறிலங்கா கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

சென்னைத் துறை முகத்திலிருந்து புறப்பட்ட இக் கப்பல் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் மூழ்கிய வண்ணம் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கே.கே.மரியோ என்ற பெயருடைய கப்பலில் பெருமளவு எண்ணெய் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. கப்பல் மூழ்கத் தொடங்கியதை அடுத்து சிறிலங்கா கடற்படையினரிடம் உதவி

(6ம் பக்கம் பார்க்க)

## சனவரி மாத ஆரம்பத்தில் சீருடைகளை வழங்க பணிப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு சனவரி மாதம் பாடசாலைத் தவணை ஆரம்பிக்கப்படும்போது ஒரு வாரத்திற்குள் இலவச பாட நூல்களை சகல மாணவர்களுக்கும் வழங்குமாறு சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்வித்துறைசார் அதிகாரிகளுக்கு இந்தப்

(6ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றம் அண்மையில் கலைக்கப்படும் சாத்தியம்

### பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசியல் நிலைமை கார்ணமாக பாராளுமன்றம் கலைக்கப்படக் கூடிய சாத்திக்கூறுகள் இருப்பதாக பொதுசன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். நேற்று கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். எந்தத் தருணத்திலும் தேர்தல் ஒன்றுக்காக மக்கள் முன்செல்ல பொதுசன ஐக்கிய முன்னணி தயாராக

(6ம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியுடன் நெருக்கடி தொடரின் பொதுத்தேர்தல் நடத்த ரணில் திட்டம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் இடையேயான தற்போதைய முறுகல் நிலை வலுப்படுமானால் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு சிறி லங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசித்து வருவதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சனாதிபதியுடன் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தொடருமானால் புதிய தேர்தலை நடத்துவது தவிர வேறு வழி யில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது சகாக்களிடம் தெரிவித்ததாக தெரியவருகிறது.

அமைச்சரவைக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் தமது சகாக்களுடன் தேர்தல் ஒன்றை நடத்துவது குறித்து ஆலோசித்ததாகவும் தெரியவருகிறது.

## வரிவிளம்பரம்


### நாதன் இரும்புத் தொழிலகம்

வேலை ஆட்கள் தேவை

மல்லாவியில் இயங்கிவரும் நாதன் இரும்புத் தொழிலகத்திற்கு வேலை ஆட்கள் தேவை. தரம்1 வெல்டர், தரம் 2 வெல்டர் கம்மாலை , வார்ப்பு வேலையாளர் தேவை தெரிந்தவர்கள் நாதன் இரும்புத் தொழிலகத்திற்கு நேரில் சமுகம் தரவும். சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். (1796)

### தவறிவிட்டது

சுப்பிரமணியம் இராமச்சந்திரன் மூர்த்தியின் தேசிய அடையாள அட்டை இலக்கம் 550563673-V ஆண்டிமுனை உடப்பு என்னும் அட்டையும் தாமோதரம் வைரவநாதன் அடையாள அட்டை இலக்கம் 5402174x உடப்பு என்னும் முகவரியைக் கொண்ட இருவரின் அடையாள அட்டைகளும் புளியங்குளத்திற்கும்- அளம்பிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும்(2049)


# சிறி.வின் சமாதான முயற்சிகளை சீனா ஆதரிக்கிறது

-சீனப் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசின் சமாதான முயற்சிகளை சீனா பூரணமாக ஆதரிக்கிறது எனச் சீனப் பிரதமர் கூறியிருக்கிறார். சீனாவிற்குச் சென்ற அமைச்சர் கருஜெயசூரியவை தனது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் சந்ததித்து பேசிய சீனப்பிரதமர்:

தமது நாடு தொடர்ந்தும் இலங்கைக்கு பொருளாதார உதவிகளை வழங்குமென்றும் உறுதியளித்தார். இலங்கை - சீனாவிற்கு இடையே நீண்ட காலமாக இரு தரப்பு உறவுகள் வளர்ச்சியுற்று வந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் இலங்கைக்கும் - சீனாவுக்குமிடையேயான நேரடி விமான சேவையை ஆரம்பிப்பது பற்றி தலைவர்கள் கவனம் செலுத்தினர்.

# முல்லை., கிளி. மாவட்ட வீராங்கனைகள் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாவட்டங்களுக்கு இடையிலான 14ஆவது மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் முல்லைத்தீவு , கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த இருவீராங்கனைகள் முதல் இடத்தைப் பெற்றுள்ளனர்.

குண்டெறிதல் பெண்கள் பிரிவில் முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். றஜனி, 1500 மீற் றர் ஓட்டப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயபவானி ஆகியோரே மேற்படி போட்டிகளில் முதலிடத்தை பெற்றவர்களாவர்.

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற தடகள போட்டிகளில் யாழ்மாவட்டவீரர்கள் வீராங்கனைகளில் பலர் முதலாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தன்னிச்சையான செயற்பாட்டை அ.தி.மு.க கைவிட வேண்டும். பா.ம.கட்சி தலைவர் ராமதாஸ்

(கொழும்பு)

"மாநில நலன் சம்பந்தப்பட்ட பொதுப் பிரச்சினைகளில் அ.தி.மு.க அரசு தனிச்சையாகச் செயற்படுவதைக் கைவிட வேண்டும்.'' என்று டாக்டர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் மாநிலச் செயற்குழுச் சட்டம், கட்சித்தலைவர் சி.கே. மணி தலைமையில் நடைபெற்றது. டாக்டர் ராமதாஸ் முன்னிலை வகித்தார்.

மாநிலச் செயற்குழுக் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

பின்தங்கியமாவட்டங்கள் மீது தனிக் கவனம் செலுத்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வசதியாக இரண்டு மாநில யோசனை தெரிவிக்கப்பட்டது. இது குறித்து கருத்துப் பரிமாற்றங்கள் வாயிலாக பொதுக் கருத்தை உருவாக்கத் தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்படும்.

மாநில நலன் சம்மந்தப்பட்ட பொதுப் பிரச்சினைகளில் அ.தி.மு.க அரசு தன்னிச்சையாகச் செயற்படுவதைக் கைவிட வேண்டும். தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும். இவ்வாறு பல தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. மாநிலச் செயல்குழுக் கூட்டம் முடிந்ததும் செய்தியாளர்களை டாக்டர் ராமதாஸ் சந்தித்தார். ''போடோசட்டத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் இருக்கும் ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைக்கோவை அடுத்த வாரம் சந்தித்துப் பேசுவேன்'' என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

-கப்பல் போக்குவரத்தை விஸ்தரிக்க-

# சிறிலங்கா - பெல்ஜியம் ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கும்- பெல்ஜியத்துக்குமிடையே கப்பல் போக்குவரத்து விஸ்தரிக்கப்படவுள்ளது. இது குறித்து இலங்கையும்-பெல்ஜியமும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளுக்கிடையே கப்பல் போக்குவரத்து நடவடிக்கை அதிகரிக்கும்.

துறைமுக அபிவிருத்தி கப்பல் போக்குவரத்து அமைச்சு, வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகள் பெல்ஜிய நாட்டு அதிகாரிகளுடன் பல்வேறு சுற்றுப் பேச்சுக்களை நடத்திய பின்னர் இவ் உடன்பாடு காணப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் சார்பில் துறைமுக அபிவிருத்திச் செயலாளர் டபிள்யு.ஏ.எஸ். பெரேரா பெல்ஜியம் அதிகாரியான மைக்கல் ஜோசப் ஆகியோர் இதில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இவ் உடன்படிக்கையை அமுல் செய்யும் வகையில் இலங்கைத் தூதுக்குழுவினர் விரைவில் பெல்ஜியம் செல்லவிருக்கிறார்கள்.

-புலிகள், சிறிலங்கா அரசை சந்தித்து -

# முஸ்லிம்களின் அபிலாசைகள் குறித்து பேச அமைச்சர் ஹக்கீம் விருப்பம்

தமிழீழத் தேசியத் தலைவரை மீண்டும் ஒரு தடவை சந்தித்து பேச்சுவார்தை நடத்தப் போவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும்சில, சம்பவங்கள் திருப்திகரமாக இல்லாததே காரணம் எனத் தெரிவித்துள்ள அவர், அரசு- புலிகள் பேச்சுவார்த்தை தாய்லாந்தில் நடைபெறுவதற்கு முன்பாக முஸ்லிம் மக்களின் அரசியில் அபிலாசைகள் தொடர்பாகவும் அரசாங்கத்துடன் பேச்சுவர்த்தை நடத்த உத்தேசித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நோர்வேயின் சிறிலங்காவுக்கான தூதுவரை சந்தித்துப் பேசியுள்ள ரவூப்ஹக்கீம் தற்போது இடம்பெற்று வரும் பல்வேறு சம்பவங்கள் தமக்கு திருப்தி அளிக்கவில்லை என்றும் இது தொடர்பாக நோர்வே அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனத் தான் கேட்டுக் கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

# சிறிலங்கா - பாக்-அமைச்சர்கள் மூன்று ஒப்பந்தங்களில் கைச்சாத்து

சிறிலங்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மூன்று ஒப்பந்தங்கள் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

சுதந்திர வர்த்தகம், உல்லாசப் பயண புரிந்துணர்வு, மற்றும் கலாச்சாரங்களை பரிமாறிக்கொள்வது போன்ற ஒப்ப்ந்தங்களே கைசாத்திடப்பட்டுள்ளன.

சிறிலங்காவுக்கு இருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்ட பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

காலை 10.45 மணியளவில் ஆரம்பித்த பேச்சுவார்த்தை நண்பகல் 12.15 வரை நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையில் வெளி நாட்டமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன, கல்வி அமைச்சர் கருணசேன கொடித்துவக்கு, வர்த்தக அமைச்சர் ரவிகருணாநாயக்க, உல்லாசப் பயணத்துறை அமைச்சர் காமினி லொக்குகே ஆகியோரும் கலந்து கொண்டனர். பாகிஸ்தான் சார்பில் சனாதிபதி முஷாரப்புடன் அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தையை அடுத்து கருத்துத் தெரிவித்த பிரதமர் விக்கிரமசிங்க பேச்சுக்கள்நன்றாக அமைந்ததாகத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையை அடுத்து பாகிஸ்தானுக்கும் சிறிலங்காவுக்கும் இடையில் மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாகிஸ் தான் சனாதிபதி முஷாரப் ஆகியோர் முன்னிலையில் இருநாட்டு அமைச்சர்களும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர்.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், உல்லாசப்பயண புரிந்துணர்வு ஒப்பந்தம், கலாசார பரிமாற்ற திட்ட ஒப்பந்தம் ஆகிய மூன்றுமே கைச்சாத்திடப்பட்டன.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் சார்பில் வர்த்தக அமைச்சர் அப்துல் ரசாக் தாவுத்தும். சிறிலங்காவின் சார்பில் வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் கைச்சாத்திட்டனர்.

உல்லாசப்பயணத்துறை தொடர்பான ஒப்பந்தத்தில் பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் இனாமுல்ஹக்கும், சிறிலங்காவின் உல்லாசப் பயணத்துறை அமைச்சர் காமினி லொக்குகேயும் கைச்சாத்திட்டனர்.

கலாசார பரிமாற்ற ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் சார்பில் வெளிவிவகார அமைச்சர் இனாமுல் ஹக்கும் சிறிலங்காவின் சார்பில் கல்வி கலாசார விவகார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குவும் கைச்சாத்திட்டனர்.

இதனையடுத்து பாகிஸ்தான் சனாதிபதி அலரிமாளிகையில் வைத்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்து சிறிது நேரம் உரையாடியுள்ளார்.

பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் ஹோட்டல் ஹில்டனில் பத்திரிகை ஆசிரியர்களையும் சந்தித்துப் பேசியுள்ளதோடு; சனாதிபதி சந்திரிகாவையும் சந்தித்துப் பேசியுள்ளார். இந்தப் பேச்சுக்களையடுத்து, மாலை சனாதிபதி குழுவினர் கொழும்பில் இருந்து சீனாவிற்கு பயணமானார்கள்.

# கூட்டுறவு முகாமை நிறுவன பயிற்சிக் கருத்தரங்குகள்

கூட்டுறவு அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கைக் கூட்டுறவு முகாமை நிறுவனம் எதிர்வரும் 23, 31ம் திகதி வரை யாழ்ப்பாணத்திலும், செப்டம்பர் 02-11ம் திகதி வரை கிளிநொச்சியிலும் பல்வேறு கருத்தரங்குகளை ஒழுங்கு செய்துள்ளது. இக்கருத்தரங்குக்கு இலங்கைக் கூட்டுறவு முகாமை நிறுவனத்துடன் சேர்ந்து வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களமும் யாழ்-கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபைகளும் அனுசரணையாளராக செயற்படவுள்ளன. கூட்டுறவுத் துறையில் கடமையாற்றும் பல்வேறு பணியாளர்களும், கூட்டுறவாளர்களும் பயன்படத்தக்க வகையில 5 பிரிவினருக்கென இக்கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இலங்கைக் கூட்டுறவு முகாமை நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ ஆலோசகர் சி.கோணேஸ்வரன் அவர்கள் இக்கருத்தரங்குகளை வடிவமைத்துள்ளதுடன், ஏனைய வள அணியினருடன் சேர்ந்து பிரதான விரிவுரைகளையும் ஆற்றவுள்ளார். இக்காலப் பகுதியில் தொழிற்துறை சார்ந்த ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள முடியுமென்பதுடன், கூட்டுறவு மற்றும் முகாமை சார்ந்த வெளியீடுகளையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலா மென இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனம் கூட்டுறவாளர் களுக்கும், பொது மக்களுக்கும் அறியத்தருகின்றது.

இக்காலப் பகுதியில் கூட்டுறவு சாராத ஏனைய நிறுவனங்களும், அமைப்புக்களும் ஒழுங்கு செய்யும் முகாமை மற்றும் உற்பத்தித் திறன் விருத்தி சார்ந்த விரிவுரைகளுக்கு உதவி நல்க முடியுமெனவும் இந் நிறுவனம் அறியத்தருகிறது. மேலதிக விபரங்களுக்கு யாழ்- கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபைகளுடன், அல்லது அவ்வப்பகுதி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

# பதிவு செய்வதற்கான அனுமதி கிடைக்கவில்லை

முல்லை மாவட்டத்தில், மோட்டார் பதிவுத் திணைக்களத்தின் மூலம் பதிவுகள் செய்யப்படாமல் உள்ள மோட்டார் ஊர்திகளை, பதிவு செய்வதற்கு மோட்டார் பதிவு திணைக்களத்திற்கு முல்லை அரச செயலகத்தால் அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையும் பதிவு செய்வதற்கான அனுமதியோ, அது தொடர்பான நடைமுறைகளோ கிடைக்கவில்லை என அறியமுடிகிறது.

இதனால் வன்னியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு மோட்டார் ஊர்திகளைக் கொண்டு செல்ல முடியாத தொரு நிலையில் மக்கள் உள்ளனர். (08)

# தொடர்பு கொள்ள கோரிக்கை

(புதுக்குடியிருப்பு)

தருமபுரம் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்ற க.சுப்பிரமணியம் (வயது40) என்பவர் மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு ஆதாரவைத்திய சாலைக்கு நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் அனுப்பி வைக்கப் பட்டு நேற்று முன் தினம் மரணமடைந்துள்ளார். இவரது உறவினர்கள் புதுக்குடியிருப்பு காவல் பணி மனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர். (08)

# சிறுவர்பூங்காவின் ஆண்டு விழா

குமா சிறுவர் கல்வி ஊட்ட மேம்பாட்டு பூங்காவின் 8ம் ஆண்டு ஆரம்ப விழாவும் விளையாட்டு விழாவும் கடந்த 24ம் திகதியன்று பூங்கா நிர்வாகி அ.எ.பிரான்ஸிஸ் தலைமையில் பூங்கா மைதானத்தில் இடம் பெற்றது. மாவீரர் குமாவின் திருவுருவப்படத்திற்கு மாவீரர் குமாவின் தயார் திருமதி இரத்தினம் அவர்கள் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றது. வெற்றியீட்டியவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக பூநகரி முழங்காவில் பிரதேச பணிப்பாளர் கேசவன் பரிசில்கள் வழங்கி கௌரவித்தார். (சோ)




01. தற்போது ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தலைமை தாங்கும் நாடு எது?
டென்மார்க்

02. ஸ்பெயின் நாட்டின் தலைநகரம் எது?
மாட்ரிட்
இலங்கையின் முதலாவது பெண் அரசி யார்?
அனுலாதேவி

03. இலங்கை கிரிக்கெட் டெஸ்ட் அணியின் முதல் தலைவர் யார்?
பந்துல வர்ணபுர

04. சந்திரனில் காலடி வைத்த முதல் மனிதன் யார்?
நீல் ஆம்ஸ்ட் ரோங்

05. விண்வெளியில் நுழைந்த முதல் பெண்மணி யார்?
தெரஸ்கோவா

06. அமெரிக்க சனாதிபதியாக இருந்த ஜோண் கென்ன்டி சுட்டுக்கொல்லப்பட்ட ஆண்டு எது?
1963

07.அ) கின்னஸ் புத்தகத்தை உருவாக்கியவர் யார்?
பேர்ள் எஸ்பேக்
ஆ) எத்தனையாம் ஆண்டில் இதை உருவாக்கினார்?
1955இல்

08. "சிலப்பதிகாரம்" யாரால் எழுதப்பட்டது?
இளங்கோ அடிகள்

09. "பாஞ்சாலி சபதம்" நூல் யாரால் எழுதப்பட்டது?
சு.பாரதியார்

10. அ) செல்போன் எத்தனையாம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது?
1908இல்

ஆ) இதைக் கண்டுபிடித்த விஞ்ஞானியின் பெயர் என்ன?
பெர்கர்

11. அ) இடிதாங்கி எத்தனையாம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது?
1752இல்

ஆ) இதைக் கண்டு பிடித்த விஞ்ஞானியின் பெயர் என்ன?
பிராங்கனின்

12. உலகில் முதலாவது தமிழ் புத்தகம் எது?
கிறீஸ்த்தவ வணக்கம்

13. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து முதன் முதலில்வெளியிட்டவர் யார்?
ஜி.யு.போப்

14. தேசிய சேமிப்பு வங்கி நிறுவப்பட்ட ஆண்டு எது?
1972

15. இலங்கை தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
1978

16. இலங்கையில் கரையோரப் பிரதேசத்தைப் பிரித்தானியர் கைப்பற்றிய ஆண்டு எது?
1796

17. பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றிய ஆண்டு எது?
1815

18. 'யுனிசெப்' அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு எது?
1946

19. ரஷ்யப் புரட்சி நடைபெற்ற ஆண்டு எது?
1917

20. கிழக்குத் தீமோர் சமாதானத்திற்காக நோபல் பரிசு பெற்றவர் யார்?
ஜோர்ஜ் ராமோஸ் ஹோர்ட்டா

21. நோபல் பரிசு பெற்ற முதல் பெண் யார்?
செய்மாலா கார்லாம்(சுவீடன்)

22. தென்னாபிரிக்காவின் தேசிய பறவை எது?
நீலக்கொக்கு

23. நேட்டோ அமைப்பு எப்போது ஆரம்பக்கப்பட்டது?
1949இல்

24. மழை நீரிலுள்ள விற்றமின் எது?
B12

25. இலங்கையைச் சூழ காணப்படும் கண்டமேடையின் பரப்பளவு எத்தனை சதுர கிலோ மீற்றர்?
44000 சதுர கிலோ மீற்றர்.

# 'பாண்டென் புளூ'

பாண்டென்புளூ எனும் நகர் பிரெஞ்சு நாட்டின் முக்கிய நகரங்களுள் ஒன்றாகும். பாரிசிலிருந்து தெற்கே முப்பத்தேழுமைல் (60கி.மீ) தொலைவில் உள்ள ஒரு பட்டணமாகும். இந்தப் பட்டணத்துக்கு இன்றுவரை சிறப்பூட்டிக்கொண்டிருப்பது அங்கு அமைந்துள்ள ஓர் அரண்மனையாகும்.

கி.பி 1137ஆம் ஆண்டுக்கு முன்புவரை இந்தப் பட்டணத்துக்குக் குடிவரவே மக்கள் அஞ்சினர். ஏனென்றால், இப்பகுதி முழுவதுமே வனாந்தரமாகவும் வேட்டைக்காடாகவும் இருந்தது.

இந்நிலையில், 16ஆம் லூயி மன்னன் இந்த வேட்டைக காட்டைத் திருத்தி பரந்த நிலப்பரப்பில் மிக விரிந்த அளவிலே ஓர் அரண்மனையை எழுப்பினான். ஆனால் அது இப்போதுள்ள கலையம்சம் பொருந்திய அழகிய அரண்மனையாக அமையவில்லை. வேட்டையாட வரும் மன்னர்களுக்கும் அவர்களின் பரிவாரத்துக்கும் தற்காலிகமாகத் தங்கும் விடுதி என்ற அளவிலேதான் கட்டப்பட்டது.

1528ஆம் ஆண்டில் முதலாம் பிரான்சிஸ் என்ற அரசன் பழைய அரண்மனையை அதன் சுவடே தெரியாதபடிக்கு இடித்துத் தரைமட்டமாக்கி விட்டு, அந்த இடத்தில் மிகப் பெரிய அளவில், கலை நுட்பம் பொருந்தியதாக இருக்கும் வகையில் இத்தாலியில் இருந்து இருபெரும்கட்டடக் கலைஞர்களை வரவழைத்து ஓர் அரண்மனையைக் கட்டுவித்தான்.

இந்த அரண்மனையில் வரலாற்றுப் புகழ் வாய்ந்த முக்கிய நிகழ்ச்சிகள் நடந்தேறியுள்ளன. இராஜ மரியாதைக்குரிய வெளிநாட்டுப் பிரதிநிதிகள், மன்னர்கள், பெருங்குடி மக்கள் என்று பல பிரபலங்கள் இந்த அரண்மனையில் கூடியிருக்கிறார்கள்.

இது எல்லாவற்றுக்கும் மேலாக, 1804ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டின் மாமன்னனாகப் பட்டத்துக்கு வந்த நெப்போலியனின் முடி சூட்டு விழா இந்த அரண்மனையில் தான் நடந்தது. இந்த முடிசூட்டு விழாவை முன்னின்று நடத்தி வைக்க 7ஆம் பயஸ் என்ற போப் ஆண்டவர் இந்த அரண்மனைக்கு விஜயம் செய்துள்ளார்.

இந்த அரண்மனையில் மற்றொரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வும் இடம்பெற்றுள்ளது.

அதாவது எந்த போப் ஆண்டவர் கரத்தினால் நெப்போலியன் முடியை சிரசில் அணிந்து கொண்டானோ, அதே போப் ஆண்டவரின் கரத்தில் விலங்கு மாட்டி அவரைச் சிறைப்படுத்தியதும் இதே அரண்மனையில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் துயரச்சம்பவம் 1812ஆம் ஆண்டுக்கும் 1814ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நடந்துள்ளது.

இதேபோன்று மற்றுமொரு துயரம் மிக்க சம்பவம் இந்த பாண்டென்புளூ அரண்மனையில் நிகழ்ந்திருக்கிறது.

எந்த அரண்மனையில் போப் ஆண்டவரை நெப்போலியன் கைது செய்தானோ அதே பாண்டென்புளூ அரண்மனையில் தான், 1814ஆம் ஆண்டு நெப்போலியன், தான் அணிந்திருந்த ராஜ கிரீடத்தை கீழே இறக்கி வைத்துவிட்டு முடி துறந்தான்.

இது தவிர, இந்த பாண்டென்புளூ அரண்மனை இரண்டாவது உலகப் போரின்போது, ஜேர்மனியர் வசம் சிக்கியது. அக்கால கட்டத்தில் ஜேர்மனியர் இந்த பாண்டென்புளூ அரண்மனையைத் தங்களின் தலைமைத் தளமாகப் பயன்படுத்தினர்.

. பின்பு பிரான்ஸ் இதே அரண்மனையை ஜேர்மனியரின் பிடியில் இருந்து விடுவித்த போது நேசநாடுகளின் தலைமைத் தளமாகவும் செயற்பட்டது. இவ்வாறாகப் பல அரிய வரலாற்றுப் புகழ் மிகுந்த நிகழ்ச்சிகளைக் கண்ட, பாண்டென்புளூ அரண்மனை இன்று உலகச் சுற்றுலாப் பயணிகளுக்கு அருங்காட்சியமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

# பித்த வெடிப்பு மறைய

* ஆரஞ்சுப் பழச் சாற்றை பஞ்சில் நனைத்து முகத்தில் தேய்த்தால் உலர்ந்த சருமத்தில் தோன்றும் வெடிப்புக்கள் மறையும்.
* ரோஜா இதழ்களைத் தண்ணீரில் போட்டுவைத்து முகத்தைக் கழுவினால் முகம் மெருகோடு இருக்கும்.
* உருளைக் கிழங்குச் சாற்றை கண்களைச் சுற்றிப் பூசினால் கருவளையம் மறையும்.
* ஜாதிக்காய் சந்தனம் இரண்டையும் குழைத்துப் பருவின் மேல் தடவினால் பரு மறையும்.
* தீயில் சுட்டுக் கொண்டால் சூடு பட்ட இடத்தில் பெருங்காயத்தை குழைத்து தடவினால் எரிச்சல் உடனே நின்றுவிடும்.
* தினமும் வேப்ப இலைகளை நீரில் போட்டு வைத்துவிட்டு ஓரிரு மணி நேரம் கழித்து குளித்தால் தோல் வியாதி வராது.
* எலுமிச்சம் பழத்தை பிழிந்து விட்டு அதன் சக்கையை பித்த வெடிப்பின் மேல் தடவுங்கள் வெடிப்பு மறைந்துவிடும்.
* மாங்காய் ஊறுகாய் போடுகின்றீர்களா எண்ணெய்யைக் காச்சிப் பயன் படுத்துங்கள் ஊறுகாயை வெயிலில் வைக்க வேண்டிய அவசியம் இருக்காது.

# விழாக்கள்

*. முதலாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
காகித விழா
*. இராண்டாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
பருத்தி விழா
*. மூன்றாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
தோல் விழா
*. நான்காவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
பூபழ விழா
*. ஐந்தாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
மரவிழா
*. ஆறாவது ஆண்டுஇறுதியில் கொண்டாடப்படும் விழா?
சர்க்கரை/கற்கண்டு/இரும்பு விழா
*. ஏழாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
கம்பளிவிழா/செம்பு விழா
*. எட்டாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
வெண்கல விழா
*. ஒன்பதாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
மண்கலச விழா
பத்தாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
தசரவிழா/அலுமினிய விழா
*. பதினொராவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
ஏ்.கு விழா
*. பன்னிரண்டாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
இன்ன விழா
*. பதின்மூன்றாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா
பின்னல் விழா
*. பதின்நான்காவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
படிக விழா
*. இருபதாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
பீங்கான் விழா
*. இருபத்தைந்தாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
வெள்ளி விழா
*. முப்பதாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
முத்து விழா
*. நாற்பதாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
மாணிக்க விழா
*. நாற்பத்தைந்தாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
இரத்தின விழா/நீலக்கல் விழா
*. ஐம்பதாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
பொன் விழா
*. ஐம்பத்தைந்தாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா
மரகத விழா
*. அறுபதாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
வைர விழா/மணி விழா/வைச்சிர விழா
*. எழுபத்தைந்தாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
பவள விழா
*. எண்பதாவதாண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
அமுத விழா/முத்த விழா
*. நூறாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா?
நூற்றாண்டு விழா.

# சூரியன்

சூரிய மண்டலம் சூரியனை மையமாகக் கொண்டது. புதன், வெள்ளி, புவி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய ஒன்பது கோள்களையும் அவற்றுக்குரிய இயற்கைத் துணைக்கோள்களான சந்திரன்களையும், குறைந்த பட்சம் எழுபத்திரண்டு நூற்றுக்கணக்கான குறுங்கோள்களையும் ஆயிரக் கணக்கான வால் விண்மீன்களும் கொண்ட பெருங்குடும்பத்துக்குத் தலைமை தாங்குகிறது சூரியன்.

நமது உடுமண்டல மையத்திலிருந்து சுமார் முப்பது முதல் முப்பத்து மூவாயிரம் ஒளி ஆண்டுகளுக்கு இடைப்பட்ட தொலைவில் இயங்குகிறது சூரிய மண்டலம்.

முதன் முதலாகக் கண்டறியப்பட்ட கோள்கள் மெர்க்குரி,வீனஸ், மார்ஸ், ஜுபிடர், சாட்டர்ன் என்று ரோமானியக் கடவுள்களின் பெயர்களையே பெற்றன. பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட யுரேனஸ், நெப்டியூன் மற்றும் புளூட்டோ போன்றவற்றிற்கும் இந்தப் பெயரீட்டு முறையே பின்பற்றப் பட்டது.

சூரியமண்டலக் கோள்களை உட்புறக்கோள்கள், வெளிப்புறக் கோள்கள் எனப்பிரிக்கலாம். புதன், வெள்ளி, புவி, செவ்வாய் ஆகியன உட்புறக்கோள்கள், அவற்றுள் ஏனைய கோள்களை விட அளவில் பெரியதும், அடர்த்தி மிக்கதுமாக இருப்பது புவியே. உட்புறக்கோள்கள் அனைத்துமே புவியைப்போல கெட்டியான பாறைப் பொருட்களாலானதால் இவற்றை புவியொத்த கோள்கள் என்பர்.

வெளிப்புறக் கோள்களான வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகியவை தோற்றத்தில் மிகப் பெரியவை. ஏராளமான துணைக்கோள்களுடையவை. பெரும்பாலும் ஹைட்ரஜன் மற்றும் ஹீலிய வளிமங்கள் நிறைந்த இக்கோள்களை ஜோவியன் கோள்கள் என வழங்குவர்.

கிரேக்கமொழியில் ஜோவ் என்னும் சொல் வியாழனைக் குறிக்கும். சூரிய மண்டல விளிம்பில் இயங்கும் புளூட்டோ தனி ஒருவகை. பொதுவாக எல்லாக் கோள்களும் தன்னச்சில் சுழன்றபடியே சூரியனையும் நீண்ட நீள்வட்டப் பாதையில் சுற்றி வருகின்றன.

**சூரியன்:**

ஆகாய கங்கையில் இது ஒரு விண்மீன். நவீனக் கணிப்புகளின் படி உடுமண்டல மையத்திலிருந்து சுமார் முப்பத்து இரண்டு ஆயிரம் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள சூரியன் தன்னோடு ஒத்துழைத்த விண்மீன்களுடன் நொடிக்கு இருநூற்றைம்பது கிலோ மீற்றர் வேகத்தில் உடுமண்டல மையத்தைச்சுற்றிப் பயணம் செய்கின்றது. இந்தக் கணக்கில் ஒருமுறை உடுமண்டலத்தைச் சுற்றிவர இருபத்தைந்து கோடி ஆண்டுகள் ஆகும். இதுவே ஒரு பிரபஞ்ச வருடம்.

சாதாரண விண்மீன்களைப் போலவே சூரியனும் ஹைட்ரஜன் வளிமத்தால் ஆனது தான். அதனுள் இடையறாது நிகழ்ந்து கொண்டிருக்கும் அணுக்கரு மோதல்களினால் தொடர்ந்து ஆற்றல் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது.

ஒருநொடிக்குள் அணுக்கருவினைப் புரியும் ஹைட்ரஜனின் நிறை இலட்சம் கோடி பவுண்டுகள் உத்தேசமாக, நாற்பத்தைந்து கோடி தொன்கள். இந்த ரீதியில் போனால், இன்னும் ஐநூறு கோடி ஆண்டுகளுக்குள் சூரியன் தன் ஹைட்ரஜன் முழுவதும் தீர்ந்து செம்பூதமாக மாறக் கூடும். அந்நிலையில் அதன் செந்நிறம் இப்போதிருப்பதை விடவும் ஆயிரம் மடங்கு பொலிவுடன் விளங்கும் பருமனோ நூறு மடங்கு பெருகியிருக்கும்.

அந்நிலையில், அதன் பக்கத்தில் உள்ள புதனும், வெள்ளியும் சூரிய வெம்மையில் உருகிப்போகும். புவியில் கடல்கள் வற்றி ஆவி யாய் மறையும். உலகில் வெறும் பாறை மட்டுமே மிஞ்சும். அதுவும் காரீயத்தை உருக்கி விடும் அளவுக்குப் பழுத்திருக்கும். உயி ரினங்கள் அங்கு வாழுமா? என்கிற கேள்விக்கே இடமில்லை. அத்து வானமயானமே.

பளபளக்கும் சூரியப்பரப்பே ஃபோட்டோஸ்ஃபியர் எனப்படும் ஒளி மண்டலம் ஆகும். இதனைச் சூழ்ந்திருக்கும் இளஞ்சிகப்புப் பகுதியினை நிற மண்டலம் என்கிறோம். இந்தப் புறப்படலத்தின் மேலிருந்து உருவாகும் அனல் வீசும் தீ நாக்குகள் போன்ற ஒளிப்பிழம்பே கரோனா.

ஒளிமண்டலத்தின் சராசரி வெப்ப நிலை ஆறாயிரம் பாகை செல்சியஸ். நிறமண்டலத்தின் வெப்ப நிலை சுமார் முப்பத்து இரண்டாயிரத்து நானூறு பாகை செல்சியஸ். நிற மண்டலத்துக்கும் ஒளி வட்டத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் வெப்ப நிலை மூன்று இலட்சத்து இருபத்து நான்காயிரம் பாகை செல்சியஸ்.

விண்வெளிக்குள் நெடுந்தூரம் வரை பரவும் ஒளிவட்டமானது எக்ஸ் கதிர்கள் வீசும் அளவுக்கு இருபத்தேழாயிரம் பாகை வெப்ப நிலை கொண்டது. வெப்ப அணுக்கருவினைகள் நிகழும் சூரிய உள்ளகம் ஏறத்தாழ 11.2 கோடி டிகிரி கெல்வின் வெப்ப நிலையில் கொதித்துக் கொண்டிருக்கிறது.

சூரிய ஒளி வட்டத்தில் நம் கண்ணுக்குப் புலனாகும்வெள்ளை ஒளி நிறமாலையின் தொகையாகும். இதில் ஆங்காங்கே நூற்றுக்கணக்கான மெல்லிய கோடுகள் தென்படுகின்றன. அவற்றை ஃப்ரான் ஹோபர்வரிகள் என்கிறோம். அவை ஒவ்வொன்றும் சூரியனின் வளி மண்டலத்தில் காணப்படும் தனிமங்களைக் குறிப்பன. அந்தந்தத் தனிமத்தின் வெப்பநிலைக்கும் அடர்த்திக்கும் ஏற்ப அவ்வரிகளின் அழுத்தமும், அகலமும் மாறுபடும்.

சூரியனில் இருந்து பெரும்பாலும் ஹைட்ரஜன் அணுக்கருக்களான புரோட்டான்கள் எப்போதும் வெளிப்பட்ட வண்ணம் உள்ளன. அந்தப் பிரகாச ஒளிர்வுகளின் போது சூரியமேற்பரப்பிலிருந்து ஒளித்துகள்களையும் அடித்துக் கொண்டு கிளம்புவதே சூரியக் கிளர்வாகும்.

ஏறத்தாழ நாற்பது பூமிகளின் அளவாகப் பெருத்துத் திரண்டு நொடிக்கு நூறுகிலோ மீற்றர்வேகத்தில் சுவாலைகள் சீறிப் பாயும். இதுவே சூரியக்கிளர்வின் அற்புதத் தோற்றமாகும். இதுவரை 1942பெப்ரவரி 28, 1949 நவம்பர் 19, 1971 டிசம்பர் 13 ஆகிய நாட்களில் உக்கிரமான சூரியக் கிளர்வுகள் பதிவாகியுள்ளன.

சூரியனின் ஒளி வட்டத்தில் இருந்து இடைவிடாது வெளிப்படும் புரோட்டான் பெருக்கினை யூஜின் நார்மன் பாப்கர் என்னும் அமெரிக்க இயற்பியலர் 1958இல் சூரியக்காற்று என்று பெயரிட்டார். இந்த சூரியக்காற்று பெரும்பாலும் ஹைட்ரஜன் மற்றும் ஹீலிய அயனிகள் அடங்கிய பிளாஸ்மா நிலைப்பேரழலே. சூரியனின் சுழற்சியினால் இந்தச் சூரியக்காற்று சுழன்றடிக்கையில் தனது காந்தப் புலன்களையும் எடுத்து வீசுகிறது. புவியின் காந்தப் புலமான காந்த மண்டலமே சூரியக் காற்றுக்கு எதிரான தடுப்புக்கவசமாகி, அதனைத் திசை திருப்பிவிடுகிறது.

இருந்த போதிலும், புவியின் காந்தப்போர்வைகளைக் கிழித்துக் கொண்டு கீழிறங்கும் இந்தச் சூரியச்சூறைக் காற்று, வளிமண்டலத் தலையை உரசிப் பறக்கும் போது துருவங்களில் கூட சுடர்த் தோற்றங்கள் காணப்படும்.

சூரியப் புள்ளிகள் என்பன சூரியனின் மேற்பரப்பில் தென்படும் இருண்டமருக்கள். சூரியனின் புற வெப்ப நிலையை (6000 பாகை செல்சியஸ்) விடக் குளிர்ந்த (சுமார் 1500 பாகை செல்சியஸ்) பகுதிகளே இந்த இருண்ட புள்ளிகளாகத் தோன்றுகின்றன.

1974ஆம் ஆண்டு ஏப்ரலில் தென்பட்ட சூரியப்புள்ளிதான் இன்று வரை பதிவானவற்றுள் மிகப் பெரியதாகும். அதன் பரப்பளவு சுமார் ஆயிரத்து எண்ணூற்று பதின் மூன்று கோடி சதுர கிலோ மீற்றர்கள்.

சூரியனின் காந்தப்புலன்கள் உச்சமாவது ஒவ்வொரு பதினொரு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான். அந்தக் காலகட்டத்தில் சூரியனின் செயல்திறனில் குறிப்பாக எக்ஸ் கதிர்கள் மற்றும் புற உதாக் கதிர் வீச்சில் குறிப்பிடும் படியான மாற்றங்கள் நிகழ்கின்றன. அடிக்கடி சூரிய அரிப்புகள் மற்றும் சூரியக் கிளர்வுகள் தோன்றும். அவையே புவி அயன மண்டலத்தில் குளறுபடிகளை ஏற்படுத்தும். காந்தப் புயல்களை வீசச் செய்யும். புவியில் வானொலித் தகவல் தொடர்புகளில் தடங்கலை உண்டு பண்ணும்.

புவிகாந்த மண்டலமே பூமிக்குரிய காந்தக் கவசம். இதனை 1959ஆம் ஆண்டில் ஜேம்ஸ்வான் ஆலன் எனும் அமெரிக்க இயற்பியலர் முதன்முறையாகக் கண்டுபிடித்தார். துவக்கத்தில் எக்ஸ் புளோரர் செயற்கைக்கோள் மற்றும் பயனீர் ஏவூர்திகளினால் உயர் வளிமண்டலத்தில் இரண்டு உயர் அழுத்த மின்வீச்சு வளையங்கள் பதிவு செய்யப்பட்டன. பயனீர்-12 ஏவூர்தி இவ்விரு கதிர் வீச்சு வளையங்களுமே மிகப் பிரமாண்டமான காந்த மண்டலத்தின் இருபட்டைகளின் பாகங்கள் என்பதை உறுதிப்படுத்தியது. ❸

# ‘பிளாடிபஸ்’

தற்சமயம் உலகத்தில் முட்டையிடும் விலங்குகள் இரண்டே இரண்டுதான் உள்ளன. இவற்றுள் ஒன்று ‘எகிட்னா’ என்னும் விலங்கு. இது முள்ளெலியைப் போல் முதுகுள்ள எறும்பு தின்னி, மற்றொன்று ‘பிளாடிபஸ்’என்னும் வாத்து அலகு.

பிளாடிபஸ்ஸின் தோற்றம் விநோதமானது. இதன் உடலமைப்பு சிற்சில அம்சங்களில் விலங்குகளையும், சில அம்சங்களில் பறவைகளையும் மற்றும் சில அம்சங்களில் ஊர்வனவற்றையும் ஒத்துள்ளது. விலங்குகளைப் போல் இது குட்டி போடாமல் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கிறது.

ஆனால், விலங்குகளைப் போல் இது பாலூட்டுகிறது. இதன் வாய் விலங்குகளின் வாய் போலில்லாமல் வாத்தின் அலகை ஒத்துள்ளது. இதனால் இதை வாத்து அலகு என்றும் அழைக்கின்றனர். இதன் கால்களில் உள்ள விரல்கள் வாத்தின் கால் விரல்களைப் போல் தோலினால் இணைக்கப் பட்டுள்ளன ஆனால், பறவைகளைப் போல் பறக்க இறக்கைகள் இல்லை.

இதன் முட்டைகள் சிறியதாக அரை அங்குல நீளம் இருக்கும். தோற்றத்தில் பாம்பு, கடலாமைகளின் முட்டை போல் மெல்லிய ஓடுகளுடன் இருப்பதால் இவ்வகையில் இது ஊர்வனவற்றை ஒத்திருக்கிறது.

பிளாடிபஸ் ஏறக்குறைய இருபது அங்குல நீளம் வளரும். இதன் மேல்பாகம் பழுப்பாகவும் அடிப்பாகம் வெள்ளை நிறமாகவும் இருக்கும். இதன் உடலை, தடித்த ஆனால் வெல்வெட்டுப் போன்ற வழவழப்பான மென்மையான மயிர் மூடியிருப்பதால் இதன் உடலின் மேல் தண்ணீர் ஒட்டுவதில்லை.

இதற்குச் சிறிய வால் உண்டு. இந்த வால் நீர் நாயின் வாலைப் போல் தட்டையாக இருப்பதால், நீந்துவதற்கு அதைத் துடுப்பைப் போல் உபயோகிக்கிறது. இதன் கண்கள் மிகவும் சிறியனவாகவும், காதுகள் பறவையின் காதுகளைப் போல் புறச் செவி இல்லாமல் உள்ளடங்கி இருக்கின்றன.

ஆண் பிளாடிபஸ்ஸின் கால்கள் இரண்டிலும் குதி முட்கள் இருக்கின்றன. இவை நஞ்சை உற்பத்தி செய்யும் சுரப்பிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஆண் பிளாடிபஸ் தன் எதிரிகளை இந்த குதிமுட்களால் கீறிக் காயப் படுத்தும் போது, நஞ்சுச் சுரப்பிகளில் இருந்து சிறிது நஞ்சு எதிரியின் இரத்தத்தில் செல்கிறது. இதனால் எதிரிகள் வலி தாங்காமல் ஓடி விடுகின்றன. ஆனால், பெண் பிளாடிபஸ்ஸிற்கு இந்த தற்காப்புச் சாதனம் கிடையாது.

பிளாடிபஸ் குளம் குட்டைகளின் கரைகளிலும், நீரின் வேகம் அதிகமில்லாத ஆழமான ஆற்றின் கரைகளிலும் பெரிய வளைகளைத் தோண்டிக் கொண்டு வசிக்கிறது. கடுங்கோடையில் கூட இது நீர் வற்றாத இடங்களில் தான் வளைகளை அமைக்கிறது. ஐம்பதடி நீளத்திற்குப் பல வளைவு சுரங்கம் போல இதன் வளை அமைந்திருக்கும். வளைகளின் முடிவில் சுள்ளிகள், இலைகள் நார் முதலியவற்றைக் கொண்டு, கூட்டைக் கட்டி குடும்பத்தோடு வாழ்கின்றது.

பிளாடிபஸ் தன் கூட்டில் இரண்டுமுதல் மூன்று முட்டைகள் வரை இடும். முட்டைகளைத் தன் வாலினால் அணைத்துக் கொண்டு அடைகாக்கும். முட்டையில் இருந்து வெளிவரும் குட்டி பார்வையில்லாமலும், உடலில் உரோமமில்லாமலும் இருக்கும்.

பெண் பிளாடிபஸ்ஸுற்கு முலைக்காம்புகள் கிடையாது. இதன் அடிவயிற்றில் கோப்பையை ஒத்த ஒரு பாகம் இருக்கிறது. பால் சுரப்பிகளில் உள்ள நுண்ணிய துளைகளில் இருந்து பால் இக் கிண்ணம் போன்ற பாகத்துக்கு வந்து சேர்கிறது. இந்தப்பாலை மற்றப் பாலூட்டிகளைப் போல இதன் குட்டிகள் உறிஞ்சிக் குடிக்காமல் நக்கிக் குடிக்கின்றன. நாட்கள் செல்லச் செல்ல சிறிய பிளாடிபஸ்ஸின் அலகினுள் பல தசைப்பற்கள் வளர்கின்றன. இப்பற்களின் உதவியால் இது நீரில் உள்ள புளுக்களைத் தின்று வாழ்கின்றது. பிளாடிபஸ் அவுஸ்திரேலியாவிலும் மற்றும் டாஸ்மேனியாவிலும் மட்டுமே காணப்படுகிறது. இதன் உடலில் உள்ள மென்மையான மயிரிலிருந்து கம்பளி நெய்வதற்காக இதை மனிதர்கள் வேட்டையாடத் தொடங்கியதால் அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்த வேட்டைக்கு இப்போது தடை விதித்துள்ளது. ■

# அதிசய மரங்கள்



மத்திய அமெரிக்காவில் உள்ள ‘பர்செரா’ என்னும் மரத்தில் இருந்து யாரேனும் ஓரிரு இலைகளைப் பிடுங்கி விட்டால், உடனே அந்த மரம் ஒருவித பிசுபிசுப்பான திரவத்தை பீச்சுகிறது.

இது டாக்டரின் ஊசியில் இருந்து மருந்து பீச்சிடுவதைப் போல் உள்ளது.

சுமார் நான்கு அல்லது ஐந்து வினாடி நீடிக்கின்ற இப்பீச்சு பதினைந்து சென்ரி மீற்றர் தூரம் வரை செல்லுகிறது.

இந்த மரத்தில் இருந்து பீச்சப்படும் திரவம் வெறுக்கத்தக்க ருசியைக் கொண்டதாக உள்ளது.

அடிப்படையில் இந்தத்திரவம் டெர்பீன்கள் எனப்படும் வேதியியல் பொருட்கள் அடங்கியதாகும்.

பிசுபிசுப்பான இத்திரவம் உடலில் ஒட்டிக்கொள்ளக் கூடியதாகும்.

இந்த மரத்தின் இலைகளிலும், தண்டுகளிலும் இத்திரவத்தை எடுத்துச் செல்கிற பாதைகள் அமைந்துள்ளன. எனவே, இலையைப் பறித்தால் திரவம் பீச்சப்படுகிறது.

அமெரிக்காவிலுள்ள அரிசோனா பல்கலைக் கழக விஞ்ஞானிகள் இந்த மரத்தை ஆராய்ந்துள்ளார்கள்.

மரத்தின் இலையில் ஒரு பகுதி மட்டும் கிள்ளப்பட்டால் அல்லது ஆடுமாடுகள் வாய் வைத்து இலைகளின் ஒரு பகுதியை மட்டும் கடித்தால் உடனே மீதியுள்ள இலைகள் மீது திரவம் பரவுகின்றது.

சில வினாடிகளில் இலையில் குறைந்தது, பாதி அளவுக்கு மேற்புறத்திலும் கீழ்ப் புறத்திலும் திரவம் படிகின்றது.

எனவே, ஆடுமாடுகள் மேற்கொண்டு இலைகளைத் தின்ன முற்படுவதில்லை. முதலில் கடிபட்டது போக மீதி இலைகள் காப்பாற்றப்படுகின்றன.

இதுதவிர-

வட கலிபோர்னியாவில் உள்ள வனங்களில் ஒளி தரும் மரங்கள் உள்ளன. இவற்றின் கீழ் அமர்ந்து புத்தகங்கள் படிக்கலாம். இரவில் ஒளி அதிகமாகும். இது அறுபது வோட்ஸ் மின்சார பல்பின் ஒளிக்குச் சமமானதாக இருக்கிறது.

அமெரிக்காவில் வேறு சில அதிசய மரங்களும் உள்ளன. அவற்றின் நரம்புகளில் ஏராளமாகப் பால் உள்ளது. அவற்றின் அடிப்பாகத்திலோ அல்லது கிளைகளிலோ வெட்டுப் போட்டால் பசுமாடு பால் கறப்பது போல சுவையான பால் வடியும்.


மற்றும் சில அதிசயமரங்கள் வானம் மழை பொழிவது போல மழைப் பொழிவை ஏற்படுத்தும். இரவில் மட்டுமே இந்த மரங்களில் மழைப் பொழிவு ஏற்படுகின்றது.

பொதுவாக, இத்தகைய மரங்கள் உள்ள இடங்களில் இயற்கையாகப் பெய்யும் மழையின் அளவு குறைவாகவே உள்ளது.

**சிந்தனைக்கு**

நான் எப்போதும் பேச்சுக்குத்தருவது குறைந்தளவு முக்கியத்துவமே, செயலால் வளர்ந்த பின்புதான் நாம் பேசத்தொடங்க வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர்
-மேதகு. வே.பிரபாகரன்-



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 03-08-2002

## கால எல்லையின் முடிவில்

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாட்டின் சரத்துக்களின் அமுலாக்கம் தொடர்பாக அதில் வரையறை செய்யப்பட்ட உச்சகால வரம்பு நிறைவுற்று விட்டது. அதாவது இப்புரிந்துணர்வு உடன்புாட்டின்படி அமுல்படுத்தப்பட வேண்டிய சரத்துக்களுக்கான உயர்ந்தளவு கால எல்லைகளின் நிர்ணயம் செய்யப்பட்ட 160 நாட்கள் முடிவடைந்து விட்டது. இந்நிலையில் இவ் உடன்பாட்டின் அமுலாக்கம், அதன் நோக்கம், பயன்பாடு என்பன குறித்து மதிப்பீடு ஒன்றைச் செய்யும் காலகட்டத்திற்குள் உடன்பாடு வந்துள்ளதெனலாம்.

சிறிலங்கா அரசாங்கத்தின் அறிவிப்பின்படி புரிந்துணர்வுடன்பாட்டில் காணப்படும் தமது தரப்பு பங்குப் பணிகள் முற்றுப் பெற்று விட்டது. இறுதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோவில்கள், பாடசாலைகள் போன்றவற்றில் இருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேறி விட்டனர் என நேற்றும் அறிவிப்புச் செய்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அறிவிப்பின்படி முற்று முழுதாக ஆயுதப்படையினர் வெளியேறாது விட்டாலும் பெரும்பாலான பாடசாலைகள், கோவில்கள் என்பனவற்றிலிருந்து வெளியேறியுள்ளனர் என்பது உண்மையே. ஒருவகையில் இது முன்னேற்றகரமான நடவடிக்கை போன்றதே ஆகும். ஆயினும் வெளியேறிய படையினர் தற்பொழுது நிலைகொண்டுள்ள இடங்கள், வெளியேறிய பாடசாலைகள், கோவில்களில் அவர்கள் மேற்கொண்ட அழிவு வேலைகள் சமாதானம் நோக்கிய பயணத்திற்கு ஆரோக்கியமானதல்ல.

குறிப்பாக கோவில்கள், பாடசாலைகளில் இருந்து வெளியேறிய படையினர் பெரும்பாலும் அப்பாடசாலைகள், கோவில்கள் என்பனவற்றின் சூழலிலேயே தமது முகாம்களை அமைக்கின்றனர். அத்தோடு தாம் வெளியேறிய பாடசாலைகள், கோவில்கள் போன்றவற்றை சிதைவுக்குள்ளாக்கியுள்ளனர்.

இதற்கும் மேலாக சில இடங்களில் ஆயுதப்படையினரின் செயற்பாடுகள் வஞ்சம் தீர்ப்பன போன்றும் அமைந்துள்ளன. அதாவது பாடசாலைகளின் செயற்பாட்டிற்கும் மாணவர்களின் செயற்பாட்டிற்கும் ஊறு விளைவிக்கும் வகையில் செயற்படுபவர்களாகவுள்ளனர். இதற்கு வேலனை மகாவித்தியாலயம் தொடர்பாக ஆயுதப்படையினர் நடந்து கொண்டதை, அதாவது பாடசாலைக்கான வீதியை மூடியிருப்பதைச் சுட்டிக்காட்ட முடியும்.

அதாவது அரசாங்கம் புரிந்துணர்வு உடன்பாட்டின் அமுலாக்கம் நிறைவு செய்யப்பட்டு விட்டது போன்று காட்டிக் கொள்ள முற்படினும் அமுலாக்கமானது இன்னமும் முற்றுப் பெறாதது மட்டுமல்ல அமுல் செய்யப்பட்ட விடயங்களில் கூட அதன் நோக்கத்தை எட்ட முடியவில்லை.

எடுத்துக்காட்டாகக் கூறுவதானால் பொது இடங்கள் (பாடசாலைகள்,கோவில்கள்) போன்றவற்றிலிருந்து வெளியேறும் இராணுவம் அதன் சூழலிலேயே குடியேறுதல் என்பது விரும்பத்தக்கதொன்றல்ல. ஏனெனில் இராணுவம் சூழலிலேயே நிலை கொண்டிருப்பதினால் அப்பாடசாலையோ அன்றி கோவிலோ இயல்நிலைக்குத் திரும்புதல் என்பது சாத்தியமாகப் போவதில்லை. இது புரிந்துணர்வு உடன்பாட்டின் நோக்கத்திற்கே மாறானதாகும்.

அத்தோடு உடன்பாடு கைச்சாத்தாகி 160 நாட்கள் கடந்து விட்ட நிலையிலும் உடன்பாட்டில் தீர்வு காணப்படாது இன்று சர்ச்சைக்குரியதாக மாறியுள்ள விடயங்களுக்கு அதிலும் குறிப்பாக விடுதலைப் புலிகளின் கடற்போக்குவரத்து தொடர்பான விடயத்திற்கு தீர்வு காண முடியாத விவகாரம் இழுத்தடிக்கப் படுதலானது ஆரோக்கியமானதல்ல. இது சமாதான முயற்சியில் காணப்படும் ஒரு பின்னடைவாகவே கொள்ளத்தக்கதாகும்.

இந்த வகையில் புரிந்துணர்வு உடன்பாடு அமுலாக்கத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை வெளிப்படுத்தியிருப்பினும் சமாதான முயற்சிகளுக்குத் தேவையான விரைந்த முன்னேற்றத்தை அது காணவில்லை என்றே கூறலாம். ஆகையினால் புரிந்துணர்வு உடன்பாட்டின்படி நிறைவு செய்யப்பட வேண்டிய சரத்துக்களின் அமுலாக்கத்திலும் ஏற்கனவே புரிந்துணர்வு உடன்பாட்டில் தீர்வு காணப்படாது தற்பொழுது சிக்கலுக்குள்ளாகியுள்ள பிரச்சினைகளுக்கும் அரசாங்கம் விரைந்து செயற்பட்டு தீர்வு காணுதல் வேண்டும். அதுவே சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் அடையவும் யுத்த நிறுத்தம் சீரான முறையில் கடைப்பிடிக்கவும் அவசியமானதாகும். அவ்வாறு இல்லாதுவிடில் சமாதான முயற்சிகள் மந்தகதி அடைந்து விட்டதான தற்போதைய கருத்து வலுப்படுவதாகவே இருக்கும்.

# சகல ஆலயங்கள் பாடசாலைகளிலிருந்து இராணுவம் வெளியேறிவிட்டதாம்

**-சிறிலங்கா பிரதமர் ரணில் கூறுகிறார்**

(கொழும்பு)

வட-கிழக்கின் பாடசாலைகள், ஆலயங்கள் என்பவற்றில் முகாம் அமைத்து நிலை கொண்டிருந்த சகல இராணுவ முகாம்களும் அகற்றப்பட்டுள்ளதாக சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தமிழ் கூட்டமைப்பினர் பிரதமரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போது இந்த விபரம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த பாடசாலைகளை மீண்டும் திறக்கவும் கட்டடங்கள், கருவிகள் மற்றும் பிற தேவைகளைப் பாட சாலைகளுக்கு செய்து கொடுக்கவும் பிரதமர் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தற்போது இடம் பெயர்ந்து முகாம்களில் வாழ்வோரை மீள குடியமர்த்துவது பற்றியும் மேற்படி கூட்டமைப்பினருடனான சந்திப்பின் போது ஆராயப்பட்டுள்ளது.

வட-கிழக்கில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் வேலைகளை இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் தனியாக மேற்கொண்டு விட முடியாது. எனவே அமெரிக்காவின் உதவி தற்போது பெறப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நோர்வேயின் உதவியுடன் இந்தியாவில் இருந்தும் நிலக்கண்ணிகளை அகற்றும் குழுக்கள் அழைத்து வரப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பாதுகாப்பு அமைச்சருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)

சிறிலங்காவின் படைத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளனர்.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவிடம் இந்த பிரேரணை கையளிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுரா பண்டாரநாயக்க, பேரியல் அஷ்ரப், விமல் வீரவன்ச, தினேஸ் குணவர்த்தன ஆகியோர் சபாநாயகரிடம் மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளைத் தடுக்க தவறியதாகவும் அந்த சம்பவங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இல்லை என்று வெளிநாட்டு செய்திச் சேவை ஒன்றிற்குப் பேட்டி அளித்ததாகவும் அந்தப் பிரேரணையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# 3 சம்பவங்கள் குறித்த ஆணைக்குழுவின் அறிக்கைகள் சனாதிபதியிடம் கையளிப்பு

சனாதிபதி ஆணைக்குழுவின் மூன்று அறிக்கைகள் நேற்று முன்தினம் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

பிந்துனுவெவ தமிழ் இளைஞர் படுகொலைகள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அஷ்ரப்பின் மரணத்துக்கு காரணமான ஹெலிகொப்டர் விபத்து மற்றும் பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையம் மீதான தாக்குதல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்களே தமது அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளன.

இவ் ஆணைக்குழுக்கள் சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக் காலத்தின் வெவ்வேறு காலப் பகுதிகளில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தன்மீதான குற்றச்சாட்டுக்கு சனாதிபதி பதிலளிக்கவேண்டும்

(கொழும்பு)

சனாதிபதிக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் பொறுப்பு சனாதிபதிக்கு இருக்கிறது என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இக்கடிதத்தில் தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளுக்கு பதிலளிக்கும் விதத்தில் அவர் தனது கருத்துக் களை தெரிவித்துள்ளார்.

சனாதிபதி மீண்டும் ஒரு தடவை தமக்கு எதிராக பொய்யான குற்ச்சாட்டுக்களை முன்வைத்து ள்ளார்.

அமைச்சரவையில் விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெற்றிருந்தால் இது பற்றி பின்னர் முறைப்பாடு செய்யப் பட்டிருக்கலாம். குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அறிவித்திருக் கத் தேவையில்லை.அமைச்சரவை கூட்டத்தில் ஏனைய அங்கத்தவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தும் சனாதிபதி தனக்கு எதிராக குறைகள் முன்வைக்கப்படும் போது ஆர்ப்பாட்டம் செய்வது ஏன்? எனவும்அவர் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

## நெறியாளர் குழு தெரிவு

(அலுவலக நிருபர்)

கிளி.கரைச்சி தெற்கு ப.நோ.கூ.ச நெறியாளர் குழுத் தெரிவு கடந்த செவ்வாய்க்கிழமை அன்று கூட்டுறவுச் சங்க தலைமை செயலக மண்டபத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் வை.குகராசா, துணைத்தலைவர் ச.சந்திரசேகரம், நெறியாளர் குழு உறுப்பினர்களாக நா.வேலாயுதம், இ.இரத்தினமணி, செ.சண்முகநாதன், மு.செந்தில்குமார், செ.செல்வராசா ஆகியோர் தெரிவு செய்யப் பெற்றனர். (சோ)

## திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை - சின்னமடு யாத்திரைத்தல திருவிழா கடந்த 27ம் திகதி- கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நாளை நற்கருணை விழா நடைபெற்று, நாளை மறுநாள் திருநாள் திருப்பலி நடைபெறவுள்ளது. இத்திருவிழா நாரந்தனை, ஊர்காவற்றுறை, கரம்பொன், அல்லைப்பிட்டி, சாட்டி, புங்குடுதீவு, அனலைதீவு, எழுவைதீவுமக்களின் ஒத்துழைப்புடன் நடைபெறுகின்றதாக பங்குத்தந்தை எரிக்றொகான் அடிகளார் தெரிவிக்கின்றார்.

# இரு விமானப்படையினருக்கு பிணை வழங்க மறுப்பு

(கொழும்பு)

பத்திரிகையாளர் இக்பால் அத்தாசுக்குகொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டது குறித்த வழக்கில் தண்டனை பெற்ற இரண்டு விமானப்படை அதிகாரிகள் விடுத்த பிணை மனுக்கோரிக்கை உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப் பட்டுள்ளது.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட விமானப்படைஅதிகாரிகளுக்கு ஒன்பது வருட கடூழிய சிறைத் தண்டனையும் பத்தாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

# ஆயுதங்களை அழிக்க வான் தாக்குதல் போதாது

**– அமெரிக்க பாதுகாப்புச் செயலர்**

(வாஷிங்டன்)

ஈராக் வைத்திருக்கும் ஆயுதங்களைத் தாக்கியழிக்க வான் தாக்குதல் மட்டும் போதுமானது அல்ல என்று அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ரொனால்ட்றம்ஸ்வெல்ட் தெரிவித்துள்ளார்.

வேஜினியாவில் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஈராக் தனது உயிரியல் ஆயுதங்களை மிக ஆழமான பகுதிகளில் மறைத்து வைத்திருப்பதாகவும் அத்துடன் இவை எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தும் வகையில் வைக்கப் பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# அடுத்த சனாதிபதி வேட்பாளர் பற்றி அனுரா பேசினால் சு.க.பிளவடையும்

## எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் அடுத்த சனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பாக அனுரா பண்டாரநாயக்க கருத்து தெரிவித்தால், சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிளவு படும் நிலை ஏற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அத்துடன் கட்சியில் அதிகாரம் கூடியவர் யார் என்பது குறித்தும் அனுரா பண்டாரநாயக்க கருத்து தெரிவித்தால் அதுவும் கட்சியை பிளவுபடுத்தும் என்றும் அவர் மேலும் கூறினார்.

சனாதிபதி வேட்பாளராகும் தகுதி தனக்கே உள்ளது என அனுரா பண்டாரநாயக்க கூறி வருகின்றமை தெரிந்ததே.

# முஸ்லிம்களின் பிரச்சினைக்குத் தீர்வுகான பாகிஸ்தான் ஒத்துழைப்பு வழங்கும்

## பாக். சானதிபதி முஷாரப் ஹக்கீமுக்கு உறுதி

முஸ்லிம்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க சிறிலங்கா மீது அரசியல் ராஜதந்திரங்களை பிரயோகிப்போம் என பாகிஸ்தான் சனாதிபதி உறுதி வழங்கியுள்ளார்.

அத்துடன் சிறிலங்காவிலுள்ள முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பலவேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண பாகிஸ்தான் முழு ஒத்துழைப்பையும் வழங்கும் என்றும் பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரவூப்ஹக்கீம் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் பாகிஸ்தான் சனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்தியபோது சிறிலங்கா முஸ்லிம்களின் இன்றைய நிலை தொடர்பாகவும் குறிப்பாக வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் நிலை தொடர்பாகவும் அமைச்சர் ஹக்கீம் முஷாரப்பிற்கு எடுத்துக் கூறியபோதே பாகிஸ்தான் சனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

# அமைச்சர் தொண்டமானின் மைத்துனர் சுட்டுக்கொலை

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மைத்துனரும், தோட்ட உரிமையாளருமாகிய வைத்திலிங்கம் நிரஞ்சன் என்பவர் கடந்த புதன்கிழமை கொள்ளுப்பிட்டியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு முன்னால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பொலிசார் இக்கொலை தொடர்பாக மற்றுமொரு பிரபல வர்த்தகரை கைது செய்துள்ளனர்.

இறந்தவரின் தலையில் சூட்டுக் காயமும், ரவையும் இருக்கக் காணப்பட்டன. இறந்தவர் ரம்பொட எஸ்ரேட்டிலிருந்து கொழும்புக்கு வரும்போது மேற்கொள்ளப்பட்ட இக்கொலைக்கு கைக்கூலி பெறப்பட்ட கொலையாளிகளே காரணமாக இருக்கலாம் என பொலிசார் கருதுகின்றனர்.

# உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் சென் சேவியர் முதலிடம்

வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற 14 வயதுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் திருமலை சென்ஜோசப் கல்லூரியை மன்னார் சென் சேவியர் கல்லூரி வெற்றிபெற்று சம்பியனானது.

இச்சுற்றுப்போட்டிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து உருத்திரபுரம் மகாவித்தியலாயம், வட்டக்கச்சி மகாவித்தியலாயம் என்பன தெரிவு செய்யப்பட்ட போதும் இரண்டாம் தவணைப் பரீட்சை காரணமாக இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ள முடியவில்லையென பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி போட்டிகள் யாழ்.மதுரையப்பா விளையாட்டரங்கில் கடந்த 29ம் திகதி நடை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர் இடமாற்றம் பெற விண்ணப்பிக்கலாம் என அறிவிப்பு

(நமது நிருபர்)

வன்னிப் பெருநிலப்பரப்பில் குறிப்பிட்டகாலம் தொடர்ச்சியாக பணியாற்றிய ஆசிரியர்கள் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் என வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரின் சுற்று நிருபம் ஒன்று தெரிவித்துள்ளது. கஷ்டப் பிரதேசத்தில் நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாகவும், வசதியான பிரதேசத்தில் ஆறு ஆண்டுகள் தொடர்ச்சியாகவும் பணியாற்றிய தகுதியானவர்கள் இந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மாகாண மட்டத்தில் இடமாற்றம் பெற விரும்பினால் செப்டம்பர் 15ம் திகதிக்குள்ளும், வலய மட்டத்தில் இடமாற்றம் பெற விரும்பினால் ஒக்டோபர் 15 திகதிக்குள்ளும், மாவட்ட மட்டத்தில் இடமாற்றம்பெற விரும்பினால் ஒக்டோபர் 31ம் திகதிக்குள்ளும் அப்பாடசாலை அதிபருடாக வலயக் கல்விப் பணிப்பாளரிடம் இடமாற்ற விண்ணப்பங்கள் விண்ணப்பிக்க வேண்டுமெனவும் அச் சுற்று நிருபம் தெரிவிக்கின்றது.

(யோ)

# உப அலுவலகம்

(மட்டக்களப்பு)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தின் உப அலுவலகம் ஒன்று நேற்று வாழைச்சேனையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் அலுவலகம் திங்கள், வியாழன் ஆகிய தினங்களிலேயே திறந்திருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

### கிழக்குக்கரை........

கோரப்பட்டதால் கடற்படை படகு ஒன்று அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக சிறிலங்கா கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும் கடுமையான கடற்கொந்தளிப்பு காரணமாக கப்பலுக்கு அருகில் கடற்படைப் படகு செல்லமுடியாத நிலை காணப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

உயிர்காப்பு படகுகளில் 10 மாலுமிகள் வரை தத்தளித்து வருவதாகவும் இவர்களைக் காப்பாற்ற இந்திய விமானம் ஒன்றை அனுப்பிவைக்க

## -நிமலராஜன் கொலை-

# திருமலையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் நிமலாஜன் படுகொலை தொடர்பாக திருகோணமலையில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட ஈ.பி.டி.பியைச் சேர்ந்த முரளி என்பவர் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரை எதிர்வரும் 16ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி யாழ்ப்பாணத்தில் இவருக்குப் பாதுகாப்பு இல்லை எனவும் இவரை கொழும்புக்கு இடம்மாற்ற வேண்டும் எனவும் விடுத்த கோரிக்கையையும் நீதிபதி நிராகரித்துள்ளார்.

இக்கொலை தொடர்பாக இவருடன் இதுவரை ஈ.பி.டி.பியைச் சேர்ந்த மூன்றுபேர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# இராமேஸ்வரத்திலிருந்து சென்ற 8 தமிழக மீனவரைக் காணவில்லை

இராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 8 தமிழக மீனவர்கள் காணாமல் போயுள்ளனர். கடந்த 29ம் திகதி மீன்பிடிக்கச் சென்ற இவர்கள் இது வரை கரை திரும்பவில்லை என பொலிசாரிடமும், மீன்வளத்துறையினரிடமும் உறவினர் முறையிட்டுள்ளனர். தற்போது இவர்களை தேடும் பணி நடைபெறுகிறது.

# கும்புறுமுனையைச் சேர்ந்த இருவரைக் காணவில்லை

மட்டக்களப்பு கும்புறுமுனையைச் சேர்ந்த இருவரைக் கடந்த ஒரு மாதமாக காணவில்லை என வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கதிரவெளி அரிசி ஆலையில் வேலை செய்து வந்த 23 வயதுடைய வீரசிங்கம் சபாபதி, 14 வயதுடைய முருகேசு நிர்மலன் ஆகியோரே காணாமல் போயுள்ளனர்.

கடந்த ஒரு மாதமாக வீட்டிற்கு வராததினால் சந்தேகமுற்ற உறவினர்கள் அரிசி ஆலைக்கு சென்று விசாரித்தபோது கடந்த மாதம் 27ம் திகதி வீட்டிற்கு செல்வதாக புறப்பட்டு விட்டார்கள் என அரிசி ஆலை உரிமையாளர் கூறினார்.

கடந்த மாத இறுதியில் வாழைச்சேனை ஓட்டமாவடி பிரதேசத்தில் ஏற்பட்ட வன்செயலில் சிக்கி இருவரும் காணாமல் போயிருக்கலாம் என உறவினர் அச்சமடைந்துள்ளனர்.

# பரீட்சை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் மத்தியஸ்தர் சான்றிதலுக்கான பரீட்சை இம்மாதம் 31ம் திகதி கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும் எனவும் இதற்குத் தோற்ற விரும்புவோர் கிளி.உதைபந்தாட்ட லீக்குடன் தொடர்பு கொள்ளுமாறு கிளி. உதைபந்தாட்ட லீக் கேட்டுக் கொள்கின்றது.

### தமிழ்..........

வெளியிட்ட அறிக்கையில்: தமிழக அரசின் இக் கைது நடவடிக்கைக்கு வன்மையாக கண்டித்துள்ளார். அத்துடன் இக்கைதை திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் கருணாநிதியும், பெரியார் திராவிட கழக பொதுச்செயலாளர் விடுதலை ராஜேந்திரனும் கண்டித்துள்ளனர். சென்னையில் செய்தியாளரிடம் கருத்து வெளியிட்ட ராஜேந்திரன் 'பொடோ' சட்டத்தின் கீழ் வை.கோ, நெடுமாறன் போன்றவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் அந்தச் சட்டம் தொடர்பாக மறு பரிசீலனை செய்யவேண்டும் என கூறியிருக்கிறார்.

இக் கைது தொடர்பாக தமிழ் தேசிய இயக்கத்தின் செயற்குழு நாளை சென்னையில் கூடவுள்ளது என தமிழர் தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர்களான சு.ப. வீரபாண்டியன், சௌவுந்தரராஜன் ஆகியோர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தனர். தமிழக அரசின் இவ்வாறான நடவடிக்கைகளில் தலையிடுமாறு கோரி இந்திய குடியரசுத் தலைவர், இந்திய தலைமை அமைச்சர், உள்துறை அமைச்சர், உச்ச நீதிமன்ற நீதிபதி, தமிழக ஆளுநர், அனைத்துலக பொது மன்னிப்புச்சபை, ஐ.நா. மானிய உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றிற்கு மனு அனுப்பி வைக்கப்படுவதாகவும் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

இதேவேளை பழ.நெடுமாறன் கைது செய்யப்பட்டதை கண்டித்து இன்று கண்டன ஊர்வலம் நடத்துவதற்கு கடலூர் மாணவ பிரிவு முடிவு செய்துள்ளது. கடலூர் மத்திய சிறையில் பழ. நெடுமாறன் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் அங்கு இவ் ஊர்வலம் நடை பெறவுள்ளதால் அப்பகுதியைச் சூழ மேலதிக பொலிசார் குவிக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

### பாராளுமன்றம்.................

இருக்கிறது என்றும் அவர் கூறினார். கட்சியின் சனாதிபதி வேட்பாளர் தொடர்பாக அதற்குள் எந்தவொரு மட்டத்திலும் பிளவுகள் ஏற்படுத்தவில்லை. சனாதிபதி தேர்தல் பற்றிய திகதி அறிவிக்கப்பட்டதும் தகுதியான வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார்.

'வற்' எனப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அமுல் படுத்தப்பட்டால் மக்களுக்கு சுமை கூடி இருக்கின்றது. இந்த வரி விதிப்பு முறை அறிமுகப்படுத்தப் பட்டவுடன் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கின்றது. எதிர்காலத்தில் நிலைமை மேலும் மோசமடையும் எனவும் அவர் தெரிவித்தார்.

### சனவரி.................

பணிப்புரை விடுத்திருப்பதுடன் இந்த விடயத்தை மேற்பார்வை செய்வதற்காக அவர் விசேட பிரிவொன்றையும் நியமித்துள்ளார்.

இதேவேளை பாடசாலை சீருடைக்கான பொதிகளில் அரசியல்வாதிகளின் தகவல்களை இணைக்கும் நடைமுறைகளை உடனடியாக நிறுத்துமாறும் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

இப்பொதிகளுடன் நல்லநெறியைப் போதிக்கும் வாசகங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப் படவுள்ளதாகவும் அத்துடன் பாடசாலை மாணவர் மத்தியில் சீருடை விநியோகத்தை துரிதப்படுத்துவது சம்பந்தமாக விரைவில் பல யோசனைகள் சமர்ப்பிக்கப் படவுள்ளதாகவும் சிறிலங்கா பிரதமரின் அலுவலக செய்திகள் தெரிவிக்கின்றன.

### செயற்பாடுகளை....

மீறும் வகையில் மத்திய வங்கியினதும், நிதிச் சபையினதும் அனுமதியின்றியும் தமிழீழ விடுதலைப் புலிகள் வங்கி நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை தமிழீழ வங்கிக்கு ஆட்களைச் சேர்க்கும் விண்ணப்பம் பகிரங்கமாக வெளியிடப்பட்டுள்ளதாகவும் இவ் வங்கிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதிகளில் நடைமுறையில் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

### காற்றினால்....

தற்காலிக குடிசைகளை அமைத்து குடிசைகளை வேய்ந்துள்ளதுடன் பாடசாலைக் கூரைகளும் ஓலையால் வேயப்பட்டே அங்கு வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

தற்போது வீசிவரும் காற்றினால் மேற்படி கூரைகளின் ஓலைகள் பிடுங்கி எறியப்பட்டுள்ளதன் விளைவாக இப் பகுதி மக்களும் பாடசாலை மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

### கைதான.........

இதர சான்றுப் பொருட்களுடன் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட தமிழீழ நீதிமன்றின் நீதியாளர் சி.தில்லை முன்னிலையில் முன்நிறுத்தப்பட்டார்.

இதன்போதே சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதியாளர் வளாகத்தை நீதிமன்றின் பாதுகாப்பில் வைக்குமாறும் பணித்துள்ளார்.

(சோ)